# பெங்., புனித வளனார் பல்கலையில் பட்டமளிப்பு விழா

# தமிழ் பாடத்தில் தங்க பதக்கம் வென்ற திருப்பூர் மாணவி

**பெங்களூரு, செப். 28–**

பெங்களூரு புனித வளனார் பல்கலைக்கழகத்தில் 3வது பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. தமிழ் பாடத்தில் திருப்பூர் மாணவி அயந்திகா துரைசாமி தங்க பதக்கம் வென்று சாதனை படைத்தார்.






■ பட்டமளிப்பு விழாவில் பங்கேற்ற புனித வளனார் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் விக்டர் லோபோ, கர்நாடக உள்துறை அமைச்சர் பிரியங்க் கார்கே, பல்கலைக்கழக வேந்தர் டயோனிசியஸ் வாஸ், தலைமை விருந்தினர் பிரேம் வட்சா, ராஜ்யசபா காங்கிரஸ் எம்.பி., மன்சூர் அலிகான், பல்கலைக்கழக இணைவேந்தர் மெல்வின் பின்டோ – இடமிருந்து வலம். ■ தங்க பதக்கம் வென்ற அயந்திகா துரைசாமி – இடது; வெள்ளி பதக்கம் வென்ற மங்கையர்க்கரசி சந்தோஷ் – வலது.

பெங்களூரு லால்பாக் சாலையில் உள்ள புனித வளனார் பல்கலைக்கழகத்தின் மூன்றாவது பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. தலைமை விருந்தினராக கனடா நாட்டில் உள்ள பேர் பேக்ஸ் பைனான்சியல் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் நிறுவன தலைவர் பிரேம் வட்சா, சிறப்பு விருந்தினர்களாக கர்நாடக உள்துறை அமைச்சர் பிரியங்க் கார்கே, ராஜ்யசபா காங்கிரஸ் எம்.பி., மன்சூர் அலிகான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழகத்தின் வேந்தர் அருட்தந்தை டயோனிசியஸ் வாஸ், துணை வேந்தர் விக்டர் லோபோ, இணைவேந்தர் மெல்வின் பின்டோதலைமையில் பட்டமளிப்பு விழா நடந்தது. இளங்கலையில் 47; முதுகலையில் 22; இதர பிரிவுகளில் 4 பேர் என 73 பேருக்கு தங்க பதக்கங்கள்...

இளங்கலையில் 46 பேர், முதுகலையில் 22 பேர் என 68 பேருக்கு வெள்ளி பதக்கங்கள் வழங்கப்பட்டன. மொத்தமாக பல்கலைக்கழக அளவில் சிறந்த இடம் பிடித்த 141 பேருக்கு பதக்கங்கள் வழங்கப்பட்டன.

இதில், 2023 – 2026ம் கல்வியாண்டில் பல்கலைக்கழகத்தில், பி.எஸ்சி., பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறையில் படித்த, தமிழகத்தின் திருப்பூர் மாணவி அயந்திகா துரைசாமி, தமிழை ஒரு பாடமாக எடுத்து படித்தார்.

வரலாறுகளில் கூறப்படுவது போல, 'காவிரி பூம்பட்டினம் தற்போது இருந்திருந்தால் எப்படி இருக்கும்' என ஆய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்பித்தார்.

அந்த அறிக்கை சிறப்பாக இருந்ததன் அடிப்படையில், அவருக்கு தங்க பதக்கம் கிடைத்தது. இதே ஆய்வு குழுவில் இருந்த சேலம் மாணவி மங்கையர்க்கரசி சந்தோஷுக்கு, வெள்ளி பதக்கம் கிடைத்தது.

மேலும் 2,300 மாணவர்களுக்கு அவர்கள் படித்த துறைகளின் சார்பில், தனித்தனி அரங்குகளில் வைத்து சான்றிதழ்கள் விநியோகம் செய்யப்பட்டன.

பதக்கம் வென்ற மாணவ, மாணவியர் தங்கள் பெற்றோர், நண்பர்களுடன் இணைந்து உற்சாகமாக புகைப்படம் எடுத்து கொண்டனர்.

பதக்கங்கள், சான்றிதழ்கள் பெற்ற அனைத்து மாணவ – மாணவியருக்கும் பல்கலைக்கழக நிர்வாகம் சார்பில், பாராட்டு தெரிவிக்கப்பட்டது. நிகழ்ச்சியின் போது, பன்னார்கட்டா சாலையில் புதிதாக திறக்கப்பட்டுள்ள புனித வளானர் பல்கலைக்கழகமும், விருந்தினர்களுக்கு காட்சிப்படுத்தப்பட்டது.